# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (23.11.2016 முதல் 27.11.2016)

**அறிக்கை எண் : 94/2016** **தேதி:22.11.2016**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 28° செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 25°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 22°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 9° செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (23.11.2016 முதல் 27.11. 2016)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 68 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 42 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 9 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 19.11.2016 | 0 | 32 | 21 | 4 | 68 | 42 | 9 | கிழக்கு |
| 20.11.2016 | 0 | 32 | 21 | 4 | 68 | 42 | 9 | கிழக்கு |
| 21.11.2016 | 0 | 32 | 21 | 4 | 68 | 42 | 9 | கிழக்கு |
| 22.11.2016 | 0 | 32 | 21 | 4 | 68 | 42 | 9 | கிழக்கு |
| 23.11.2016 | 0 | 32 | 21 | 4 | 68 | 42 | 9 | கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு குறைந்த வெப்பநிலை மற்றும் போதுமான காற்றின் வேகம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இறவை மஞ்சளில் இலைப்புள்ளி அதிகளவில் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கண்கானித்து, ஏக்கருக்கு 1 கி மேன்கோசெம் (அ) 500 கிராம் கார்பன்டசிம் (அ) 1.25 கி காப்பர் ஆக்ஸிக்ளோரைடு மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு குறைந்த வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால், ரோஸ் செடியில் மேல் சாம்பல் நோய் தென்பட வாய்ப்புள்ளது. இதனை கண்காணித்து, நனைந்த கந்தக மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் என்ற அளிவல் கலந்து தெளிக்கவும்.
- ✓ காற்றின் வேகம் மணிக்கு 9 கி.மீ என்ற வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், நடுப்பட்ட கரும்புக்கு விட்டம் கட்டுவதுடன் அடுத்த பாரிலுள்ள விட்டத்துடன் சேர்த்து கட்டவும்.
- ✓ ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ள மத்திய கால சம்பா நெற்பயிர்கள் கதிர் பிடிக்கும் பருவத்தில் உள்ளது. பூக்கள் எண்ணிக்கை மற்றும் நெல் மணிகள் அதிகரிக்க 1 சதம் யூரியா மற்றும் 2 சதம் டி.ஏ.பி மற்றும் 1 சதம் பொட்டாஷியம் க்ளோரைடு தெளிக்கவும்.
- ✓ குறைந்த வெப்பநிலை பாதிப்பிலிருந்து தவிர்க்க கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு அதிக கலோரி உள்ள தீவனங்களை கொடுக்கவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ள மத்திய கால சம்பா நெற்பயிர்கள் கதிர் பிடிக்கும் பருவத்தில் உள்ளது. பூக்கள் எண்ணிக்கை மற்றும் நெல் மணிகள் அதிகரிக்க 1 சதம் யூரியா மற்றும் 2 சதம் டி.ஏ.பி மற்றும் 1 சதம் பொட்டாஷியம் க்ளோரைடு தெளிக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**